செ.வெ.எண் :-

நாள் :- 9.11.2011

## பத்திரிக்கை செய்தி:

மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி.இ.ஆ.ப.அவர்கள் தலைமையுரையில் பேசியதாவது:-

சிறுசேமிப்பு திட்ட வசூல் மாநில அரசுக்கு வரியில்லாத வருவாயாக அமைவதால் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் பல நிறைவேற்றிட இது நிதி ஆதாரமாக அமைந்துள்ளது. தமிழக அரசு சிறுசேமிப்புத் திட்ட வசூலை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை உருவாக்கி சிறுசேமிப்பு வசூலை அதிகரிக்கச் செய்கிறது. சிறுசேமிப்பு முகவர்கள் பணி இதில் முக்கியமான்தாக அமைந்துள்ளதால் அவர்களது பணிகளை ஊக்குவிக்கும் பொருட்டு முகவர்களுக்கு மாதந்தோறும் ஆய்வுக் கூட்டம் நடத்தபட்டும் சேமிப்பை அதிகரிக்க அறிவுரைகள் வழுங்கப்பட்டு வருகிறது.

2010-2011-ம் ஆண்டு 53 கோடி சிறுசேமிப்புத்திட்டத்தில் சாதனை எய்தப்பட்டுள்ளது. 2011-2012-ம் ஆண்டு அக்டோபர் 2011-வரை 18.16 கோடி சாதனை எய்தப்பட்டுள்ளது. மகிழப்பிரதான் ஹெஷ்டிரிய பஜாஜ் யோசனா முகவர் 526 நபர்களும் , நிலை முகவர் 136 நபர்களும் , பொது சேமநலநிதித்திட்ட முகவர் 2 நபர்களும் , ஆக மொத்தம் 664 சிறுசேமிப்பு முகவர்கள் இம்மாவட்டத்தில் பணி புரிகிறார்கள்.

2011-2012-ம் ஆண்டு புதிய அஞ்சலக தொடர்வைப்புத்திட்டத்தில் 9470 கணக்குகள் துவக்கப்பட்டுள்ளது. 12.68 லட்சம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

2011-2012-ம் ஆண்டிற்கு ரூ.10.00 லட்சம் நிதி ஒதுக்கீடு சிறுசேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க சென்னை சிறுசேமிப்பு இயக்குநர் அவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது. 46.00 லட்சம் நிதி ஒதுக்கீடு சென்னை சிறுசேமிப்பு இயக்குநர் அவர்களிடமிருந்து வர வேண்டியுள்ளது.

குறிப்பாக மாணவ , மாணவிகள் படிக்கும் போதே சேமிப்பு பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும். தொடக்க கல்வியிலேயே சஞ்சயிகா போன்ற சேமிப்பு பழக்கம் நடைமுறையில் உள்ளது. இதனால் கிராமபுற மாணவர்களும் தங்கள் ஏழை எளிய தாய் ,தந்தையரின் பொருளாதாரத்தை வீணாக்காமல் தங்களுக்கு கிடைக்கும் பணத்தை சேமிப்பதால் எதிர் காலத்தில் தங்கள் உயர் கல்விக்கு கூட பயன்படும். மேலும் ஆசிரியர்கள் ,மாணவர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும். வீட்டிற்கு அருகிலுள்ள அஞ்சலகத்தில் ஒவ்வொருவரும் ஒரு அஞ்சலகத் தொடர் சேமிப்புக்கணக்கை தொடங்கி சேமித்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு)
தேனி